தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 14-10-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## கார்த்திகை பட்ட பயிர்களுக்கான விலை முன்னறிவிப்பு

மானவாரி நடவுகளுக்கு தமிழ்நாட்டில் கார்த்திகை பட்டம் மிக முக்கிய பருவமாகும். வருடத்தின் மொத்த மழை அளவில் (998 மி.மீ) 48 சதவீத மழை அளவு இப்பருவத்தில் பெறப்படுகிறது. இதற்கு வடகிழக்கு பருவமழை, கார்த்திகை பட்டத்துடன் இணைந்து வருவது காரணமாகும். இதன்பிறகு வரும் குளிர் காலத்தில் கொண்டைக் கடலை, கொத்தமல்லி மற்றும் கம்பு போன்ற பயிர்கள் சாகுபடி செய்ய ஏற்றதாக உள்ளது. விவசாயிகளின் கார்த்திகை பட்ட நடவுக்கு ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கும் வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் முக்கிய பயிர்களான கம்பு, கொத்தமல்லி மற்றும் கொண்டைக் கடலை ஆகியவற்றுக்கு கீழ்கண்ட விலை முன்னறிவிப்புகளை வெளியிடுகின்றது.

### கம்பு

உலகின் முக்கியமான உணவு மற்றும் கால்நடை தீவனமாக கம்பு உள்ளது. உலகின் முன்னனி உற்பத்தியாளராக இந்தியா உள்ளது. தானிய வகைகளில் அதிக வறட்சியைத் தாங்கும் தன்மை இவற்றிற்கு உள்ளது. 2013-14ல் இந்தியாவில் 7.95 மில்லியன் ஹெக்டர் பரப்பு சாகுபடி செய்யப்பட்டு 8.79 மில்லியன் டன் கம்பு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இவற்றின் உற்பத்தி திறன் எக்டருக்கு 1,106 கிலோவாக உள்ளது. தமிழ்நாட்டின் கம்பு சாகுபடி பரவலாக இரண்டு பருவங்களில் (மே - ஜுன் மற்றும் அக்டோபர் - நவம்பர்) மேற்கொள்ளப்படுகின்றது. மழை அளவை பொறுத்து குறிப்பாக அக்டோபர் - நவம்பர் மாதங்களில் அதிக அளவில் கம்பு பயிரிடப்படுகின்றது.

2011-12ம் ஆண்டில் தமிழ்நாட்டில் 0.46 இலட்சம் எக்டரில் பயிரிடப்பட்டு 1.14 இலட்சம் டன் உற்பத்தி செய்யப்பட்டது. இவற்றின் உற்பத்தி திறன் எக்டருக்கு 2,453 கிலோவாக இருந்தது. உற்பத்தியில் விழுப்புரம் மாவட்டம் 29,870 டன்கள் உற்பத்தியுடன் முன்னணி வகிக்கின்றது. இதனைத் தொடர்ந்து தூத்துக்குடி, மதுரை, தேனி, விருதுநகர், திண்டுக்கல் மற்றும் கடலூர் மாவட்டங்கள் உள்ளன.

கடந்த 11 வருடங்களில் விழுப்புரம் சந்தையில் நிலவிய விலை விவரங்கள் ஆய்வு மற்றும் வர்த்தக பொருளாதார ஆய்வுகளின் அடிப்படையில் தற்சமயம் நடவு செய்யும் கம்புவிற்கு வரும் 2015ம் வருடம் பிப்ரவரி – மார்ச் மாத அறுவடையின் போது குவிண்டாலுக்கு ரூ.1,400 – 1,500 ஆக

இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் விவசாயிகள் நடவு முடிவுகளை தேர்வு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**கொத்தமல்லி**

கொத்தமல்லி ஒரு வாசனை பயிராகும். உணவிற்கு சுவையூட்டுவதில் இது முதலிடத்தில் உள்ளது. இதன் தாயகம் மத்திய தரைக்கடல் பகுதியாகும், வணிகரீதியில் இந்தியாவில் அதிகமாக பயிரிடப்படுகிறது. இதன் இலையும், விதைகளும் வர்த்தக பொருட்களாகும். இந்தியா உலக கொத்தமல்லி உற்பத்தியில் சுமார் 80 சதவீதத்தை கொண்டுள்ளது. 2013-14ல் 4.5 –5.0 இலட்சம் டன்கள் கொத்தமல்லி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இந்தியாவில், இராஜஸ்தான் (60%), மத்திய பிரதேசம், ஆந்திர பிரதேசம், கர்நாடகா, தமிழ்நாடு மற்றும் ஒரிசா ஆகியன கொத்தமல்லி பயிரிடப்படும் முக்கிய மாநிலங்களாகும்.

ஆண்டுக்கு சராசரியாக இந்தியாவின் மொத்த கொத்தமல்லி உற்பத்தியில் 5 முதல் 10 சதவீதம் ஏற்றுமதி செய்யப்படுகிறது. 2013-14ல் இந்தியா ஏறத்தாழ 35,000 முதல் 40,000 டன்கள் கொத்தமல்லியை ஏற்றுமதி செய்துள்ளது. இந்த ஆண்டு சர்வதேச சந்தையில் இந்திய கொத்தமல்லிக்கு கணிசமான அளவு தேவை இருப்பதால் ஏற்றுமதி அதிகரித்து உள்ளது. நடப்பு நிதியாண்டான ஏப்ரல் முதல் ஜூலை 2014 வரை கொத்தமல்லி ஏற்றுமதியானது 11,412 டன்களிலிருந்து, 16,000 டன்களாக உயர்ந்து கடந்த ஆண்டை விட சுமார் 40 சதவீதம் அதிகரித்துள்ளது. மலேசியா, பாகிஸ்தான், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் சவுதி அரேபியா போன்ற நாடுகள் இந்தியாவிலிருந்து அதிக அளவு கொத்தமல்லியை இறக்குமதி செய்கின்றன. தமிழ்நாட்டில், 2011-12ல் கொத்தமல்லி 10,804 எக்டரில் பயிரிடப்பட்டு 5,049 டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. தூத்துகுடி மாவட்டத்தில் அதிக அளவில் 3,975 எக்டரில் பயிரிடப்படுகிறது. அதனை தொடர்ந்து, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் பயிரிடப்படுகிறது. அக்டோபர் முதல் டிசம்பர் மாதம் வரை கொத்தமல்லி பரவலாக நடவு செய்யப்படுகிறது. ஜனவரி முதல் ஏப்ரல் மாதம் வரை நடவு செய்யப்பட்ட கொத்தமல்லி அறுவடை செய்யப்படுகிறது.

விருதுநகர் சந்தையில் பிப்ரவரி – மார்ச் 2014ல் கொத்தமல்லி விலையானது குவிண்டாலுக்கு ரூ.8,750 ஆக இருந்தது. கொத்தமல்லியின் தற்போதைய விலையானது குவிண்டாலுக்கு ரூ.11,500 ஆகும். கடந்த 11 வருடங்களில் விருதுநகர் சந்தையில் நிலவிய விலை விவரங்கள் ஆய்வு மற்றும் வர்த்தக பொருளாதார ஆய்வுகளின் அடிப்படையில் தற்சமயம் நடவு செய்யும் கொத்தமல்லிக்கு வரும் 2015ம் வருடம் பிப்ரவரி – மார்ச் மாத அறுவடையின் போது குவிண்டாலுக்கு ரூ.11,600 ஆக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. கொத்தமல்லியைப் பொறுத்தவரை விதைகள் பொன் நிறமாக இருக்கும் பருவத்தில் அறுவடை செய்தால் நல்ல விலை கிடைக்கும். இந்த விலையின் அடிப்படையில் விவசாயிகள் விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**கொண்டைக் கடலை**

உலகளவில் இந்தியாவானது கொண்டைக் கடலை உற்பத்தியிலும், நுகர்விலும் பெரும் பங்கு வகிக்கிறது. 2013 -14ல் இந்தியாவின் கொண்டைக் கடலை உற்பத்தியானது 9.9 மில்லியன் டன்களாகும். இது, 2014-15ல் 5.9 சதவீதம் என்ற அளவில் குறைந்து 9.3 மில்லியன் டன்களாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், பாகிஸ்தான் (23.50%), துருக்கி (20%), அல்ஜிரியா (20%) மற்றும் இலங்கை (5%) போன்ற நாடுகளுக்கு அதிக அளவில் கொண்டைக் கடலையை இந்தியா ஏற்றுமதி செய்கிறது. உலக கொண்டைக் கடலை உற்பத்தியில், இந்தியா 67

சதவீதத்தையும், உள்ளூர் மொத்த பருப்பு உற்பத்தியில் 40 சதவீதத்தையும் கொண்டுள்ளது. மத்திய பிரதேசம் (33% ), இராஜஸ்தான் (20%), மகாராஷ்டிரா (16%) மற்றும் ஆந்திரா (9%) ஆகிய மாநிலங்களில் கொண்டைக் கடலை பரவலாக பயிரிடப்படுகிறது.

தமிழ்நாட்டில், பரவலாக கார்த்திகை பட்டத்தில் (அக்டோபர் - நவம்பர்) கொண்டைக் கடலை பயிரிடப்படுகிறது. 2012-13ல் தமிழ்நாட்டில் 9,800 எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு, 5,800 டன்கள் கொண்டைக் கடலை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக திருப்பூர் மற்றும் கோயமுத்தூர் மாவட்டங்களில் அதிக அளவு சாகுபடி செய்யப்படுகிறது. வர்த்தக மூலங்கள் ஆய்வின் படி, நவம்பர் - டிசம்பர் மாதங்களில் வெளிமாநிலங்களிலிருந்து வரத்தும், பிப்ரவரி - மார்ச் மாதங்களில் உள்ளூரிலிருந்து வரத்தும் வரத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த 10 வருடங்களில் உடுமலைப்பேட்டை சந்தையில் நிலவிய விலை விவரங்கள் ஆய்வு மற்றும் வர்த்தக பொருளாதார ஆய்வுகளின் அடிப்படையில் தற்சமயம் நடவு செய்யும் கொண்டைக் கடலைக்கு வரும் 2015ம் வருடம் பிப்ரவரி – மார்ச் மாத அறுவடையின் போது குவிண்டாலுக்கு ரூ.4,350 – 4,500 ஆக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் விவசாயிகள் நடவு முடிவுகளை தேர்வு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள</u>


உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி- 0422-2431405


<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>


1. பேராசிரியர் மற்றும் தலைவர்,
பயறுவகைத் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயமுத்தூர்-641003,
தொலைபேசி: 0422-2450498

2. பேராசிரியர் மற்றும் தலைவர்
வாசனை மற்றும் நறுமணப் பொருட்கள் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003
தொலைபேசி- 0422-6611284.

3. பேராசிரியர் மற்றும் தலைவர்
சிறுதானியங்கள் துறை
தாவர இனவிருத்தி மற்றும் மரபியல் மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641003
தொலைபேசி- 0422-2450507

மக்கள் தொடர்பு அலுவலர்